**ஆகஸ்ட் - 4**

**"கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.**

**-2 தீமோ 2:24,25**

தேவனுக்குப் பிரியமான பிள்ளைகள் சிலர் தேவனுடைய திட்டத்தைப் பற்றி மற்றவர்களிடம் விசேஷமாக படித்தவர்களிடம் சொல்லும்தபாது அளவுக்கதிகமான சுயநம்பிக்கையையும், தான்சொல்வதே சரி என்ற நிலையையும் காட்டி சத்தியத்தின் மேலான செல்வாக்கை கெடுத்திருக்கிறார்கள். சாந்தகுணமானது எங்கு காணப்படினும் அது ஒரு ரத்தினமாக இருக்கிறது. விசேஷமாக சத்தியத்தோடு இசைந்து அது ஒரு கவண் போல செயல்படுவது மிகச்சிறப்பு. சத்தியம் முடிந்தளவு முழுவேகத்தில் கொடுக்கப்படவேண்டும். என்றாலும், அது எப்பொழுதும் சாந்தகுணத்தோடும், மனத்தாழ்மையோடும் கொடுக்கப்படவேண்டும். கேள்விகள் மூலமாக சத்தியத்தைக் கொடுப்பது என்பது எப்பொழுதும் மிகசிறப்பாகப் பலன் கொடுக்கக்கூடிய ஒரு முறையாகும். **- Z ’00, 14(R 2558)**

மிகத்திறனாடு தேவனுக்காகவும் அவரது காரியத்திற்காகவும் அவரது மக்களுக்காகவும் செயல்பட வேண்டும் என்பதே உத்தியோகத்தின் இலக்கு, என்பதை இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற குணாம்சங்கள் சத்திய ஊழியக்காரனை சரியாக உணர்ந்து கொள்ளச்செய்கிறது. இந்தக் குணாம்சங்களில் குறைபாடுகள் ஒருவனை சத்திய ஊழியத்திற்கு தகுதியில்லாதவனாக்கி, அவன் எவ்வளவுதான் திறமையுள்ளவனாக இருந்தாலும், அவனை சகோதரர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவியாய் இருப்பதற்குப்பதில் தீமை செய்பவனாக்குகிறது. நிதானித்தறியும் திறனுள்ள மக்கள் மதபோதகர்களின் குருவகுப்பாருக்குரிய தந்திரங்களைக் கண்டுகொண்டு வெறுப்படைகிறார்கள். ஆனால் நமது எஜமானரின் ஆவியை உடனடியாகக் கண்டுகொண்டு ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், அவரது நடத்தை விதமும், போதக முறையும் இந்த வசனத்திலுள்ள அப்போஸ்தலருடைய வார்த்தைகளில் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. **- P ’32, 112.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 13:8; நீதி 15:2; 16:13; யூதா 3; தீத் 3:2; 1தீமோ 3:2,3; 6:11; ரோம 12:18;14:19; 1கொரி 4:21; 10:31,32; பிலி 2:3,14; கொலோ 3:12; யாக் 1:19; 2தெச 3:15; 2தீமோ 2:25.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 166. (R 5698)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் கர்த்தருடைய வசனத்தை மற்றவர்களுக்கு அறிவித்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? எப்படி? ஏன்? பலாபலன்கள் எவை?**